RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s-222815

# சஞ்சாரத்தின் இலக்கிய சிந்தனைகள்

**தி. தமிழ்ச்செல்வி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு-638009, தமிழ்நாடு, இந்தியா.

# Literary Thoughts of Sancharam

**T. Tamilselvi** [a, *]

[a] Department of Tamil, Erode Arts and Science College (Autonomous), Erode-638009, Tamil Nadu, India

* Corresponding Author: selvipoovizhi23@gmail.com

Received: 20-09-2022
Revised: 30-10-2022
Accepted: 13-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

This is a work about Nadaswaram artists from Karisal village. The manner in which Nadaswaram artists were oppressed on the basis of caste, the stagnation in the development of Nadaswaram music in the development of technology. The novel also chronically explains the glorious life of the Music Vellalars of Tamil Nadu and the downs in their lives in the course of time. It illustrates the picture of nadaswaram artists being oppressed and hunted down as criminals in society and organisation. 'It illustrates the picture of nadaswaram artists being oppressed and hunted down as criminals in society and organisation. S. Ra's writings can also be classified as 'Literary Taste'.

**Keywords:** Nadaswaram, Music Vellalars, Caste, Karisal village

## முன்னுரை

கரிசல் மண் பகுதியில் வசிக்கும் நாதஸ்வர கலைஞரின் வாழ்வை பதிவு செய்யும் நாவல் நாவலின் மைய நோக்கம் கூடுமானவரை கரிசல் மண்ணின் செவிவழிக் கதைகளை பதிவு செய்து விடுவது தானோ என்று கூட தோன்றியது மனுடன் மனிதனுக்கு நேரடி தொடர்பு இருந்தபோது அது தனக்கேற்றபடி மனிதர்களையும் மாற்றி அமைத்து அதில் விலையும் பயிர்கள் கால்நடைகள் தொழில் மொழி தெய்வங்கள் என எல்லாத்துக்கும் தனித்த அடையாளம் இருந்தது. இலக்கிய ரசனை உடன் படைக்கப்பட்ட எஸ். ராவின் எழுத்துக்களை 'ரசனை இலக்கியம்' என்றறே கூறலாம்.

## கரிசல் இலக்கியம்

தமிழ்நாட்டின் மண் வகைகள் பெரும் பிரிவுகளாக நான்கு என்று சொல்கிறது. செம்மண், கரிசல் மண், செம்பொறை மண், கடற்கரை மண் இன்றைய சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கிய பழைய ராமநாதபுரம் மாவட்டத்தில் தான் கரிசல் மண். அதைத் தொட்டுக் கொண்டிருக்கும் மதுரை, தூத்துக்குடி, புதுக்கோட்டை மாவட்டங்களின் பகுதிகளிலும் கரிசல் உண்டு. இந்த மண்ணின் எழுத்துக்களே கரிசல் இலக்கியம்.

## கலையும், கரிசல் மண்ணும் அறிமுகம்

நாவலில் ரத்தினமும் பக்கிரியும் இணைந்து நாதஸ்வரம் வாசிக்கும் கரிசல் மண்ணின் இசைக் கலைஞர்கள். ரத்தினம் வயதில் மூத்தவர். குடும்பஸ்தர். சாதியின் பெயரால் ஏற்படும் அவமானங்களை சகித்துக் கொள்ளப் பழக்கப்பட்டவர். பக்கிரி இள ரத்தம். தனிக்கட்டை. பதிலுக்கு பதில் இடம்

கொடுக்காமல் அவனால் பேசாமல் இருக்க முடிவதில்லை. அப்படி அவன் ஆவேசத்தில் பொங்கி எழும் சந்தர்ப்பத்தில் செய்யும் ஒரு தன்னிலை மறந்த காரியம் சில உயிர்கள் பலியாவதற்குக் காரணமாக அமைந்து விடுகிறது (Ramakrishnan, 2017). அவர்கள் இருவரும் போலீசுக்கு பயந்து பல ஊர்களுக்கு பயணமானபடி இருக்கிறார்கள். இந்த பயணத்தில் அவர்கள் நினைவுகளின் வழியாக கலையும் கலைஞர்களும் கரிசல் மண்ணும் நமக்கு அறிமுகம் ஆகிறது.

## வாழ்வை பதிவு செய்தல்

சஞ்சாரம் கதையின் தொய்வை ஈடு கட்டுவதற்காக அமைக்கப்பட்டது போல் அவர்கள் ஊர் ஊராக தப்பியோடும் விறுவிறுப்பானது மையக்கதை. கரிசல் மண்ணின் நாதஸ்வர கலைஞர்களின் வாழ்வை பதிவு செய்யும் நாவல் என்ற ஒற்றை வலியில் சஞ்சாரத்தை வரைவது கடினம் (Ramakrishnan, 2018).

வாசித்து முடித்ததும் நாவலின் மைய நோக்கம் கூடுமானவரை கரிசல் மண்ணில் செவிவழிக் கதைகளை பதிவு செய்து வருவது தானோ என்று கூடத் தோன்றியது. நாவலை வாசிக்கும் நம்மில் அனேகம் பேர். அந்த அடையாளங்களை விற்று தாங்கள் வெகுதூரம் வந்திருப்பதை உணரக்கூடும்.

## ஊரோடிப்பறவைகளின் அவல நிலை

ஊரோடிப் பறவைகள் கூட்டம் கூட்டமாக கரிசல் மண்ணின் மீது பறக்கையில் 'மண்ணு வேணுமா பொண்ணு வேணுமா' என்று கேட்டதையும், மக்கள் மண்ணு வேணும் என்று கேட்ட வரைக்கும் அவர்கள் தந்த நெல்லை தின்று மழை தந்ததையும் பிறகு யாரும் மண் கேட்காததால் பறவைகள் இறங்க முடியாமல் பசியோடு அலைந்ததையும் கிராம மக்கள் மட்டும் மண் கேட்டுவிட்டு ஆனால் நெல்லை சாப்பிட தந்ததால் ஊரோடிகள் சாபமிட்டு பறந்ததையும் பிறகு ஒதுட்டும் அழகில்லாமல் வறட்சியின் உச்சியில் அனைவரும் இருந்து அழைத்த பிறகு ஒரே ஒரு ஊரோடு வந்திரங்கி தான் மட்டும் மிச்சம் இருப்பதாகும் தன்னால் மட்டும் மலையை உணர முடியாது என்று சொல்ல தன் கண்ணீரில் ஒரே ஒரு வேப்ப மரத்தை மட்டும் பிழைக்கச் செய்து போனதையும் பிறகு மரம் தழைத்து தன் குளிர்ச்சியால் மலையை கொண்டு வந்ததையும் அதனாலயே என்று கரிசல் மண் வேம்புகளால் நிரம்பி இருப்பதாகவும் பற்றிய நாவலின் ஒரு கதைப்பகுதி.

## தலைமுறை நினைவூட்டல்

ஒரு காலத்தில் கரிசலின் நிலப் பகுதியில் வாழ்ந்த தாத்தா பாட்டிகள் அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டும். ஒருவேளை அடுத்த தலைமுறைக்கும் தெரியாமல் போகக்கூடும்.

இரண்டு சிறுவர்கள் வானத்தைப் பார்த்துக் கொண்டு 'மொதல்ல வானம் தலையில இடிக்கிற உயரத்துல தான் இருந்துச்சாம்' என்றும் 'வானத்தில் இருக்கிறவங்க நூலேனியைப் போட்டு பூமிக்கு எறங்குவாங்களாம்' என்றும் பேசிக்கொள்வதாக நாவலில் வரும் (Ramakrishnan, 2017).

30 வருடங்களுக்கு முன் இதே வரிகளை என் பாட்டி சொன்னதுக்கு நினைவுக்கு வந்தது. கரிசல் மண்ணின் கதைகள் மட்டுமல்ல. தமிழ் மண்ணின் கதைகள் நம் தலைமுறை இந்த கதைகளை பற்றி தொடர்ச்சியாக கடைசி கண்ணியாக இருக்க வேண்டும் என்ற முனைப்பில் ஆசிரியர் கதைகளை கிடைத்த இடமெல்லாம் நாவலில் விளக்கப்படுத்தி உள்ளார்கள்.

## குழந்தைகளுக்கு கதை சொல்லல்

முதலில் கலைப்பும் சலிப்பும் அடையும் வாசகர் மனது பிறகு இக்கதைகள் காட்டும் மண்ணின் விரிந்த சித்திரம் மையக்கதையே சித்திரக்குலனாக ஆகிவிடுவதை உணர்ந்து கொள்கிறது. இக்கதைகள் எல்லாம் குழந்தைகளுக்குச் சொல்ல இன்று நம் பகுத்தறிவு தடுக்கிறது. காந்தி ஒரு இடத்தில் "பத்து

தலை ராவணன் வருகிறான்" என்பதற்காக ராமாயணத்தை அறிவுக்கு பிரம்மாண்டமாக ஒதுக்க வேண்டியதில்லை.

சிங்கமும் நரியும் பேசிக்கொள்ளும் ஈஷாப்பின் நீதிக்கதைகள் குழந்தைகளை முட்டளாக்குவதில்லை மாறாக அறிவாளிகளாக்குகிறது என்று எழுதுகிறார். மனிதர்கள் ஆதிகாலம் தொட்டே தான் காணும் அனைத்துக்கும் விளக்கம் அளிப்பதில் முனைப்பாக இருந்து வந்திருக்கிறார்கள்.

## கரிசல் நில ஊர்களின் சிறப்புகள்

### மூதூர்

முதல் மாதரி நிகழ்வான திருவிழா மனிதர்களின் இயல்பை மாற்றி விடுகிறது.அடக்க ஒடுக்கமாக இருந்த மனிதன் கூட கூட்டத்தைக் கண்டால் ஆள் உருமாறி விடுகிறான் சந்தர்ப்பத்திற்காக காத்துக் கொண்டிருந்தவனால் போல் கோச்சிரடுகிறான் எடுத்துத் தருகிறான். வேஷ்டி தரையில் புரள குடித்துவிட்டு ஆடுகிறான் ஆண்களைத் திருவிழா மூர்க்கமாகி விடுவதைப் போல பெண்களை பேரழகிகள் ஆக்கி விடுகின்றன.

### அரட்டானம்

வரட்டானும் சிவன் கோயில் மிகப் பெரியது ஊரின் நடுவே கிழக்கு நோக்கி இக்கோயில் அமைந்துள்ளது. இதற்கு மூன்று முக்கிய வாசல்கள் உள்ளன. அவை மட்டுமின்றி அர்த்தமண்டபத்தின் தென்பகுதியில் ஒன்றும் வடபகுதியில் ஒன்றுமாக இரண்டு துணை வாசல்களும் இருக்கின்றன. முதல் கோபுரம் ஏழு நிலைகளுடன் இரண்டாம் கோபுரம் மூன்று நிலைகளுடனும் உயர்ந்தோங்கி நிற்கின்றன. இக்கோவிலின் முன் இரண்டு பிரகாரங்கள் உள்ளன. இங்குள்ள நந்தி மற்ற கோவில்களில் இருப்பது போல் இன்றி கழுத்து மாலைகள் சூடி அலங்கார நந்தியாக நுண்மையான வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ளது.

### கரிசக்குளம்

எல்லா நிலத்தைப் போலவும் கரிசலிலும் ஒரு காலத்தில் தவறாமல் ம மீது கொண்டிருந்தான் இருந்தது அதற்கு காரணம் 64 ஊரோடும் பறவைகளின் வருகை அவை கொக்குகள் போல வெள்ளை நிறமா இருந்தன. ஆனால் கொக்கி விடவும் நீண்ட அழகு கொண்டிருந்தன அதுபோன்ற பறவையை கரைசல் வாசிகள் முன்னோரு போலும் கண்டதே இல்லை. ஒரு கோடி என அப்புறம் அழைத்தார்கள்.

### உறங்காப்பட்டி

பிரிட்டிஷ் ஆட்சி நடந்து கொண்டிருந்த காலத்தில் ஒரு ஆள் நாதஸ்வரம் ஒன்றை தோழி மாட்டியபடி கரிசில் ஒற்றைகளாக நடந்து வந்து கொண்டிருந்தான். கருப்பு கடல் போல விரிந்து கிடந்தது கரிசு நிலம் கண்ணேட்டு தூரம் வரை கரிசலின் மூலம் காவல் நிலையம் பிறந்திருந்தது அலை ஆம் அலையேதான் கடலின் அழகைப் போல கரிசலும் அலை வீசுகிறது இது வெயிலின் நிலை கரிசலின் ஊடே சுற்றி வாசித்து வாழன் கண்ட ஒரே உண்மை நாதஸ்வரம் என்பது வெறும் வாத்திய கருவி இல்லை அது கரிசலின் ஆன்மாவை வெளிப்படையச் செய்யும் ஒரு வாத்தியம் வெயில் எப்படி கரிசல் பூமியில் பிறந்தவனை வளர்த்திருக்கிறதோ அப்படித்தான் இந்த வாத்தியமும் இதை கேட்பதன் படியே அவன் மண்ணின் ரகசியத்தை அறிந்து கொள்கிறான்.

### புதுக்குடி

ஓதியூருக்கு வடக்கு இருந்தது புதுக்குடி அங்கே காளியம்மன் கோவிலுக்கு வாசிக்க போனபோது 10 வயது சிறுவன் ஒருவன் கையில் ஊறுகாய் மட்டையை வாங்கி வைத்துக்கொண்டு முன்னாள் உட்கார்ந்து ஊறுகாயை சப்பத் துவங்கினான்.

## தாம்பரம்

பஸ் தாம்பரத்தில் போய் இறங்கி போது மணி நாளாக இருந்தது லேசான குளிர் அடித்துக் கொண்டிருந்தது. இறங்கி ஒரு டீ குடிக்கலாம் என்று போனார். எதற்கும் உபயோகம் இல்லாமல் போய் போன் பண்ணிட்டு டீ குடிக்கலாம் என போன் எடுத்தார் உமாபதி போன் எடுக்கவில்லை தூங்கிக் கொண்டிருக்கிறான் போலவும் 6 மணிக்கு பொறுத்திருந்து பார்ப்போம் என டீக்கடை பெஞ்சில் உட்கார்ந்தபடியே டீ குடிக்க துவங்கினார் நிதானமாக பேப்பர் படித்தார் சாலை கடந்து செல்லும் ஆட்களை வெறுத்து பார்த்தபடியே இருந்தார் அப்படியும் மணி ஆறு ஆகவில்லை.

## கொடுமுடி

மறுநாள் காலை கோமகை கூட்டிக்கொண்ட டெய்லர் கடையில் அளவு கொடுத்து விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தார் பாட்டு ஆயிரம் கண் போதாது வண்ண கிளியே எனும் பாடல் அவன் மெதுவாக முனமொழித்தான் போலீஸ்காரன் முறைத்தபடியே வாயை மூடிட்டு முடி கொண்டு வாடா என்றால் அவர்களின் தெரிந்து முகத்தை கண்டபோது பக்கிரிக்கு போலீஸ்காரருக்கு பாவம்தான் என்று தோன்றியது. தனக்குத்தானே சிரித்துக்கொண்டான் என்றோ மருதூரில் கேட்ட மரங்களின் சத்தமும் உரையாடலையும் நினைவில் வந்து போனார்கள். கரிசல் நிலப்பகுதியில் மரங்கள், மழையையும் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

## இசையின் உத்தேச நிகழ்வுகள்

மனிதர்கள் ஆதிகாலம் தொட்டே தான் காணும் அனைத்துக்கும் விளக்கமல பெரும் முனைப்பாக மக்கள் இருந்து வந்துள்ளார்கள். அறிவியலும் உத்தேச கருதுகோள்களை உருவாக்கி அவற்றை மெய்ப்பிப்பதன் அல்லது பொய்ப்பிப்பதன் வழியாகவே இன்றும் நகருகிறது நான் எனக்கார் லட்சியம் மட்டும் கோவில் நாதஸ்வரத்தை மெய்மறந்து வாஸ்துபடி இருக்கிறார். தன் வாளில் வாழ்நாளில் கேட்ட அறியாத அந்த இசை மாலிகாபூரை மூச்சடைக்க வைக்கிறது (Ramakrishnan, 2018).

அவர் வாசிப்பில் கல்லால் செய்யப்பட்ட யானைச் சிலையும் காதை ஆசைப்பதை பார்த்து பிரமிக்கிறார். அவரை தன் எஜமான் அலாவுதீன் கில்ஜிக்கு பரிசாக அளிக்க டெல்லிக்கு அழைத்துச் சென்று விடுகிறான் கபூரும் கில்ஜியும் நாதஸ்வர ஒலிக்க சல்லாவிப்பதையும் பிறகு படிப்படியாக அந்த இசையை அவர்களை அழிப்பதையும் இதற்கெல்லாம் காரணமான நாதஸ்வரம் இனி வடக்கே வரக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டதையும் அதனால் இன்று வரை எந்தவித வடமாலைத்தவரும் நாதஸ்வரம் கற்காதையும் உணர முடிகிறது.

பவுன் இருபது ரூபாய் விற்ற காலத்தில் ஒரு கலைஞன் கச்சேரிக்கு ஆயிரம் ரூபாய் வழி செய்த முதல் இசைக்கருவி இந்த நாதஸ்வரம் தான் ஆனால் இன்று பல தலைமுறைகளாக வந்ததை தாங்கள் வாரிசுகளுக்கு கையை கை கொடுத்து வந்த இசை வேளாளர்களின் குடும்பங்களிலேயே தொடர்ச்சியற்றுப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது. கலைஞனுக்கு எவ்வளவு மன அழுத்தத்தை கொடுக்கும் என்பதை நாவலில் உணர முடிகிறது.

## முடிவுரை

கரிசல நிலத்திலும் கூட நாதஸ்வரக் கலைஞர்களின் தன் குணமான நிலைகளுக்கு ஏற்ற முற்றிலும் வெவ்வேறான தனிப்பட்ட அனுபவங்கள் மூலம் கலைஞரின் வாழ்க்கை கால மாற்றத்திற்கேற்ப ரசனை மையத்துடன் மக்களை வாசிக்கத் தூண்டுகிறது இந்த சஞ்சாரம் நாவல். அனைவரும் படிப்போம் சஞ்சாரம் நாவல்.

## References

Ramakrishnan, S. (2017) Sancharam, Desanthiri Pathippagam, Chennai, India

Ramakrishnan, S. (2018) Sancharam, Desanthiri Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License